
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 18, 2021

திங்கட்கிழமை ஜூலை 18, 2022 | ஒளி: 08 கதிர் 051 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## கூடுகிறது கொரோனா: சனியன்று மரணமில்லை

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சிறியளவான அதிகரிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். கடந்த சில நாட்களில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை சுமார் 25 ஆக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், அதற்கு முந்தைய காலங்களில் இது சுமார் 10 ஆக மட்டுப்படுத்தப்பட்டு இருந்தாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## ஐ.ம.ச முடிவுக்கு மு.கா ஆதரவு



ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும் எந்தவொரு தீர்மானத்துக்கு தாங்கள் ஆதரவளிப்போம் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



ஜனாதிபதி பதவிக்கு நான்முனை போட்டி

# கட்சிகளுக்குள் முரண்பாடு

ஜனாதிபதி பதவிக்காக நால்வரின் பெயர்கள் இதுவரை முன்மொழியப்பட்டுள்ளன. பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## நாடு திரும்புகிறார் கோட்டாபய ராஜபக்‌ஷ



ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்துள்ள கோட்டாபய ராஜபக்‌ஷ, அடுத்த மாதம் இலங்கை திரும்புவார் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இராஜினாமாவை அடுத்து ஓய்வு பெற்றுள்ள ஜனாதிபதியின் சிறப்புரிமைகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பெற்றுக்கொள்ள உள்ளார் என்றும் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

அதற்கமைய, கொழும்பில் உத்தியோகபூர்வ இல்லம், பாதுகாப்பு படை,

தொடர்ச்சி P2

## ரணிலுக்கு ஆதரவு: கருத்தில் மாற்றம் இல்லை

### ஜீ.எல்.பீரிஸின் கடிதத்துக்கு பதில் அனுப்புவேன் என்கிறார் சாகர



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள், பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி தெரிவின் போது ஆதரவளிக்கவுள்ளனர் என்றும் அதுவே தமது கட்சியின்

தொடர்ச்சி P2

### இலக்கத்தட்டு இறுதி இலக்கம் மூலம்

## எரிபொருள் நிரப்பும் நாட்கள் வெளியீடு



புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டு முறையின் கீழ், வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நாட்கள் குறித்த விவரங்களை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

சர்வதேச சந்தையில், மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 101.2 டொலராக அதிகரித்துள்ளது.

அத்துடன், மேற்கு டெக்ஸாஸ் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 97.59 டொலராக பதிவாகியதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச சந்தையில், கடந்த தினம் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 100 டொலரை




விடவும் குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## தமிழர் அபிலாஷைகளையும் உள்வாங்க வலியுறுத்தவும்

### குமார் குணரத்தினத்திடம் மனோ கோரிக்கை

“நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதை புறந்தள்ளி செயற்படுவது முறையானதல்ல. மீண்டும் பழைய பாதையிலேயே போக கூடாது” என முன்னிலை சோஷலிச கட்சியின் பொது செயலாளர் குமார் குணரத்தினம் கூறுகிறார். இதுவே எமது கொள்கையாகவும்



இருக்கிறது. இதனாலேயே நாம் எப்போதும் ராஜபக்‌ஷ அரசியல் கலாசாரத்தை எதிர்த்து வந்துள்ளோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 15 இலட்சம் பேர் வேலையிழந்தனர்

பொருளாதார நெருக்கடி காரணமாக நிர்மாணத்துறை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது என இலங்கை தேசிய நிர்மாணத்துறை சங்கம் அறிவித்துள்ளது. தற்போது முகங்கொடுக்கும் நிலைமை இன்னும் சில நாட்களுக்கு நீடிக்குமாயின் நிர்மாணத்துறை முழுமையாக சீர்குலைந்துவிடும். அவ்வாறான அபாயகரமான நிலைமையே நாட்டில் ஏற்பட்டுள்ளது என்றும் அச்சங்கம் எதிர்வு கூறியுள்ளது.

தொடர்ச்சி P2

## 100 நாட்களை கடந்த போராட்டம்

காலி முகத்திடலில் ஏப்ரல் 8ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டமானது 100 நாட்களை நேற்றுடன் (ஜூலை 17) கடந்தது.

ஜனாதிபதியின் தனிப்பட்ட வாசஸ்தலத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட எதிர்ப்பு போராட்டத்தை கலைத்ததை அடுத்தே, காலி முகத்திடலுக்கு முன்பாக போராட்டம் ஆரம்பமானது.

அந்தவாரத்தில் ஏப்ரல் 8 ஆம் திகதியன்று காலிமுகத்திடலுக்கு வந்தவர்கள் அங்கேயே நிரந்தரமாக தங்கிவிட்டனர். அதன்பின்னர். கோட்டா கோ கம” என பெயரிட்டனர். பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக வியாபிக்கப்பட்ட “கோட்டா கோ கம”வின் மீது மே. 9ஆம் திகதியன்று தாக்குதல் நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2





## நடமாடும் எரிபொருள்

நடமாடும் முறைமையின் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு அடுத்தக்கட்டமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நேற்று (17) தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



### விசர்நாய்க்கடி

## ஆறு மாதங்களில் 12 பேர் உயிரிழப்பு

நீர்வெறுப்பு நோய் (விசர்நாய்க்கடி) காரணமாக, கடந்த ஆறு மாதங்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. விசர்நாய் கடிக்கு எதிராக நாய்களுக்கு தடுப்பூசி போடாததும் நாய் கடித்த பின்னர் உரிய நேரத்தில் சிகிச்சை பெறாததும் இவ்வாறான மரணங்கள் ஏற்படுவதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## பெயர்களுக்குப்பின் கூட்டமைப்பு தீர்மானிக்கும்

### சு.க எவருக்கும் ஆதரவில்லை

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

பாராளுமன்றத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (19) ஜனாதிபதி வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்தது.

தொடர்ச்சி P2

### முனியப்பர் கோவில்

## பூஜையில் வைத்த 10 இலட்சம் மாயம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - கோட்டை முனியப்பர் கோவிலில் தொழிலில் முதலீடு செய்வதற்காக பூஜையில் வைத்து எடுத்த 10 இலட்சம் ரூபாய் பணத்தை இருவர் கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சி P2



## தேசிய எரிபொருள் பாஸ் இணையத்தில் திருத்தம்

வாகன ஓட்டுநர்களுக்கு வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை உறுதி செய்யும் வகையில் ‘தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டு’ (பாஸ்), நேற்று முன்தினம் (16) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்தார்.

தொடர்ச்சி P2

### பொலிஸார் விரட்டியதில்

## ஓரமாக நின்றவர்களை மோதித்தள்ளிய டிப்பர்

### எழுவர் படுகாயம்

எஸ். தில்லைநாதன், எம்.றொசாந்த்

வடமராட்சி - நெல்லியடி, மாலைசந்திப் பகுதியில் மணல் கடத்தலை தடுக்க பொலிஸார் டிப்பர் ஒன்றை விரட்டிச் சென்றபோது ஏற்பட்ட விபத்தில் 7 பேர் படுகாயமடைந்தனர். இதில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (16) அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். மணல் கடத்திச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றை பருத்தித்துறை



பொலிஸார் மறித்த போதும், அந்த வாகனம் நிற்காமல் சென்றுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஐ.ம.ச முடிவுக்கு மு.கா ஆதரவு

அவ்வாறு பெயர் குறிக்கப்படும் வேட்பாளர், பதவிக்கு மட்டுமே அடிப்படையாக இல்லாமல், மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தகுதியானவராக இருத்தல் அவசியமாகும் என்றும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடு முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை தேடும் வகையில், சர்வக்கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதே காலத்தின் தேவையாகவும் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சகல பிரச்சினைகள் தொடர்பில் பல சுற்றுப்பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த ஹக்கீம், ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும் தீர்மானத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்றார்.

தற்போதைய நிலையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பல குழுக்களாக பிரிந்துள்ளன. அந்த முன்னணிக்குள் ஓர் இணக்கப்பட்டாடு இல்லை என்றும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

## ரணிலுக்கு...

ரெும்பான்மையானோரின் நிலைப்பாடு எனவும் கட்சியின் பொதுச்செயலாளரும் சட்டத்தரணியுமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

எடுக்கப்பட்ட தீர்மானத்தில் மாற்றம் இல்லை என்றும் பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து விளக்கம் கோரி, கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அனுப்பியுள்ள கடிதத்துக்கு மிக விரைவில் பதில் வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## 15 இலட்சம் பேர் வேலையிழந்தனர்

நிர்மாணத்துறையைச் சேர்ந்த சுமார் 15 இலட்சம் பேர், வேலையை இழந்துள்ளனர் என இலங்கை தேசிய நிர்மாணத்துறை சங்கத்தின் தலைவர் எம். டீ.போல் தெரிவித்துள்ளார்.

கட்டட நிர்மாணத்துறை தொடர்பில் பொருட்களின் விலைகள், மணல் மற்றும் சீமெந்து பொருட்களுக்கான விலைகள் மற்றும் ஏனைய கூலியாட்களின் கொடுப்பனவும் உள்ளிட்டவை அதிகரிக்கப்பட்டுள்ளமையால், நிர்மாணத்துறைகளில் வேலைகளும் குறைந்துவிட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆறு மாதங்களில் 12 பேர் உயிரிழப்பு

நீர்வெறுப்பு நோயினால் வருடாந்தம் 20 தொடக்கம் 30 வரையான மரணங்கள் ஏற்படுவதாகவும் வருடம் தோறும் ஆறு வாரங்களுக்கு மேல் உள்ள அனைத்து நாய்களுக்கும் விசர்நாய் கடி தடுப்பூசி போடுமாறும் சுகாதார அமைச்சு பரிந்துரைத்துள்ளது.

பொது சுகாதார கால்நடை சேவை பணிப்பாளர் டொக்டர். எல்.டி. கித்சிரி, 95 சதவீதமான நோய்த்தொற்றுகள் நாய் கடிப்பதனால் ஏற்பட்டுவதாகவும், நாய்க்குட்டிகள் மூலம் குறித்த நோய் பரவி அதிக ஆபத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

கடந்த ஆறு மாதங்களில் 5 இலட்சம் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகவும் 30 ஆயிரம் தெரு நாய்களுக்கு கருத்தடை செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்..

நாட்டில் 20 முதல் 30 மில்லியன் நாய்கள் இருப்பினும் ஆண்டுக்கு சுமார் 1.1 மில்லியன் நாய்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

70 வீதமான நாய்களுக்கு தடுப்பூசி போடப்படுவதன் மூலம் குறித்த நோய் பரவுவதை குறைக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்சிகளுக்குள் முரண்பாடு

இந்நிலையில், ஜனாதிபதி தெரிவு தொடர்பில் கட்சிகள் மற்றும் கூட்டமைப்பு, முன்னணிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடுகள் ஆரம்பித்துள்ளன.

புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டியுள்ளமை தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் இன்று சபையில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளமை தொடர்பில் பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் தலைமையில் சனிக்கிழமை (16) காலை 10 மணிக்கு விசேட பாராளுமன்ற அமர்வு நடைபெற்றது.

கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமா கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க இதன்போது சபையில் வாசித்தார்.

பின்னர் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் நடைமுறை தொடர்பிலும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இன்று முதல் 7 நாட்களுக்குள் வேட்புமனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பதனால், எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

வெற்றிடமாக உள்ள ஜனாதிபதியின் எஞ்சிய காலத்திற்கு புதிய ஜனாதிபதி ஒருவரை ஒரு மாதத்திற்குள் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், அதனை இரகசிய வாக்கெடுப்பு மூலமே மேற்கொள்ள வேண்டும்.

இந்த வாக்களிப்பின் போது சபாநாயகரும் வாக்களிக்க முடியும். பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அதிகாரியாக செயற்படுவார்.

வேட்புமனு கையளிக்கப்படும் தினத்தில் அந்த வேட்பாளர் அன்றைய தினம் கட்டாயமாக சபையில் இருக்க வேண்டும்.

ஒருவருடை பெயர் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டால் வாக்கெடுப்பு இன்றி ஜனாதிபதி தெரிவு இடம்பெறும்.

ஒருவருக்கு மேற்பட்டவர்கள் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் பட்சத்தில் வேட்புமனு சமர்ப்பிக்கப்பட்டு 48 மணித்தியாலங்களுக்குள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

அதன் பிரகாரம், எதிர்வரும் ஜூலை 20 ஆம் திகதி ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

## எரிபொருள் நிரப்பும் நாட்கள் வெளியீடு

அதற்கமைய, வாகன இலக்கத் தகட்டு எண்ணின் கடைசி இலக்கத்தின்படி வாரத்தின் ஏழு நாட்களில் குறிப்பிட்ட நாட்களில் மட்டும் இலக்க அடிப்படையில் எரிபொருள் ஒதுக்கீட்டைப் பெற முடியும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

0, 1, 2 - திங்கள், வியாழன் ஆகிய நாட்களும், 3, 4, 5 ஆகிய இறுதி இலக்கங்களுக்கு- செவ்வாய், வெள்ளிகிழமைகளிலும் 6, 7, 8, 9 ஆகிய இறுதி இலக்கங்களுக்கு புதன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு, தற்போது எரிபொருள் வரிசையில் இருப்பவர்களை அகற்ற வேண்டும் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர, அதற்கு இராணுவ உதவியை நாடியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வரிசையில் நிற்பவர்களையும் புதிதாகப் பதிவுசெய்யப்பட்டோரையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது என்பதால் அவர்களை எரிபொருள் நிலைய வரிசைகளில் இருந்து அகற்றுவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் உதவுவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இனி எரிபொருள் அனுமதிச்சீட்டின் கீழ் மட்டுமே இயங்கும் என்றும் வரிசையில் நின்றால் எரிபொருள் கிடைக்காது என்றும் சுட்டிக்காட்டினார்.

## பூஜையில் வைத்த 10 இலட்சம் மாயம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தான் புதிதாக தொடங்கவிருந்த தொழில் முயற்சிக்கு முதலீடு செய்வதற்கான 10 இலட்சம் ரூபாய் பணத்தை முனியப்பர் கோவிலில் பூஜையில் வைத்து எடுத்து தருமாறு பூசகரிடம் கொடுத்துள்ளார்.

பின்னர், பூஜையில் வைத்து எடுத்த பணத்தை கோவிலுக்கு வெளியில் கொண்டு வருவதற்கு இடையில் அங்கு நின்றிருந்த இருவர் அப்பணத்தைப் பறித்துக்கொண்டு தப்பி ஓடியுள்ளனர்.

நேற்று முன்தினம் (16) இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தேசிய எரிபொருள் பாஸ் இணையத்தில் திருத்தம்

மேலும், அதிக வாகனங்களைக் கொண்டுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு அவற்றை பதிவு செய்யும் வகையில் இணையதளம் மேம்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் தெரிவித்ததாவது,

http://fuelpass.gov.lk/ என்ற இணையத்தில் தங்களுடைய விவரங்களைப் பதிவு செய்யுமாறு மக்களைக் கேட்டுக்கொண்ட அமைச்சர், திட்டம் எப்போது செயற்படுத்தப்படும் என்று பின்னர் அறிவிக்கப்படும் என்றார்.

ஒரு தேசிய அடையாள அட்டை எண்ணின் கீழ் ஒரு வாகனத்தை பதிவு செய்ய முடியும், வாகனத்தின் சேஸ் எண் உட்பட ஏனைய விவரங்கள் சரிபார்க்கப்பட்டவுடன் QR குறியீடு ஒதுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

QR குறியீட்டைப் பயன்படுத்தி வாகன இலக்கத்தகட்டின் கடைசி இலக்கத்தின்படி வாரத்தின் 2 நாட்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் என்றார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி ஆகியவற்றின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த சேவை மூலம் எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

குறித்த இணையத்தளம் அதிக பயனர்கள் அணுகியதன் காரணத்தினால் செயற்படாத போதும் அணுகுவோரின் எண்ணிக்கை குறைந்ததும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் அனைவரும் பதிவு செய்து கொள்ளமுடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## பெயர்களுக்கு...

தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் கூட்டமைப்பு தொடர்ந்தும் கலந்துரையாடி வருவதாக கட்சியின் ஊடகப்பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியானது, எதிர்வரும் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தெரிவில் போட்டியிடும் எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என்று தீர்மானித்துள்ளதாக கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, சனிக்கிழமை (16) அறிவித்துள்ளார்.

## நடமாடும்...

முச்சக்கர வண்டிகள் மற்றும் ஜெனரேட்டர் தேவைகளுக்கு எரிபொருள் நிரப்புவதற்கு ஒரு முன்னோடி திட்டமாக நடமாடும் எரிபொருள் விநியோகிகள் பயன்படுத்தப்படும் என்றார்.

அத்துடன் இரண்டு சக்கர வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், மற்றும் கேன்களுக்கு எரிபொருள் நிலையங்களுக்கு அப்பால் பெரிய திறந்தவெளிகளில் எரிபொருள் நடமாடும் சேவைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்த அமைச்சர், இந்தத் திட்டம், நாடளாவிய ரீதியில் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

## கூடுகிறது கொரோனா: சனியன்று மரணமில்லை

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சிறியளவான அதிகரிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். கடந்த சில நாட்களில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை சுமார் 25 ஆக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், அதற்கு முந்தைய காலங்களில் இது சுமார் 10 ஆக மட்டுப்படுத்தப்பட்டு இருந்தாகவும் குறிப்பிட்டார்.

இது எச்சரிக்கை அல்ல என சுட்டிக்காட்டிய அவர், கொரோனா குறித்து பொதுமக்கள் அக்கறையுடன் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தடுப்பூசியின் நான்காவது டோஸை விரைவில் பெறுவதற்கு மேலதிகமாக முகக்கவசம் அணிதல் போன்ற சுகாதார நடவடிக்கைகளை பின்பற்றுமாறு சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், சனிக்கிழமையன்று (16) எவ்விதமான கொரோனா மரணங்களும் இடம்பெறவில்லையென, அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று (17) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடு திரும்புகிறார் கோட்டாபய ராஜபக்ஷ

வாகனங்கள் உள்ளிட்ட பல சலுகைகள், முன்னாள் ஜனாதிபதிக்கும் அவருடைய மனைவிக்கும் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

தற்போது வெளிநாட்டில் உள்ள கோட்டாபய ராஜபக்ஷவின் கோரிக்கையின் பேரில் இந்த வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழர் அபிலாஷைகளையும் உள்வாங்க வலியுறுத்தவும்

இந்த உத்தேச புதிய அரசியல் கலாசசாரம், தமிழர் அபிலாஷைகளையும் வெறும் ஒருசில கோஷங்களுக்கு அப்பால் சென்று, கோட்பாடுகளாக உள்வாங்க வேண்டும். இதை போராட்டக்காரர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும். இதற்கு குமார் குணரத்தினத்தின் முன்னிலை சோஷலிச கட்சியும், ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அரசியல் சட்டங்களுக்கு அப்பால் மக்கள் சக்தி உருவாகியுள்ளது. அந்த சக்தியின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டியது அதிகாரத்தில் உள்ளவர்களின் கடமையாகின்றது. அது உண்மை. ஆனால், இதே விதமான சட்டத்துக்கு அப்பால் சென்றுதான், கடந்த காலங்களில் தமிழர்கள் ஒடுக்கு முறையை சந்தித்தார்கள். இப்போதும் சந்திக்கிறார்கள் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஆகவே, மக்கள் சக்தியை அடிப்படையாகக் கொண்ட மக்கள் சபைகள் உருவாக்கப்படட்டும். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு தீர்வுகள் வரட்டும். நாமும் அவற்றை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். ஆனால் சட்டங்கள் வரமுன் அவற்றுக்கு அப்பால் முதலில் கோட்பாடுகள் வர வேண்டும். அவையே பின்னர் அரசியலமைப்பில் இடம்பெறும்.

இப்போது போராட்டக்காரர்கள் மத்தியில், தமிழர்களின் தேசிய அபிலாசைகள் தொடர்பில், கோட்பாடுகளை நாம் காணவில்லை. எமக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு போராட்டக்கார அமைப்புகளின் ஆவணங்களில் ஒருசில மென்மையான கோஷங்களைத்தான் நாம் காண்கிறோம்.

ஆகவே தமிழர் அபிலாஷைகளையும் கோஷங்களாக மட்டும் இல்லாமல், கோட்பாடுகளாக உள்வாங்க வேண்டும். இதற்கு மக்கள் விடுதலை முன்னணி, முன்னிலை சோஷலிச கட்சி ஆகிய அமைப்புகள் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

## ஓரமாக நின்றவர்களை...

இதையடுத்து, பொலிஸார் அவர்களை விரட்டிச் சென்ற நிலையில், குறித்த டிப்பர், மாலைசந்தை பிள்ளையார் கோவிலின் சப்பைரதத் திருவிழாவை முன்னிட்டு இடம்பெற்ற இசைக் கச்சேரியை பார்த்துக்கொண்டு, வீதியோரமாக நின்றவர்களை மோதித் தள்ளியது. இதில், 7 பேர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் அனைவரும் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். இவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தகவல்கள் கிடைக்கின்றன.


இந்நிலையில், விபத்தை ஏற்படுத்திய டிப்பர் தப்பிச் சென்றுள்ளது. மணல் கடத்தல் மற்றும் விபத்துச் சம்பவங்கள் தொடர்பில் பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## 100 நாட்களை கடந்த...

அதன்பின்னர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமா செய்தார்.

ஜூலை 9 ஆம் திகதின்று நிலைமை இன்னும் மோசமடைந்தது. ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் உள்ளிட்டவை போராட்டக்காரர்களை கைப்பற்றப்பட்டன. அதன்பின்னர், ஜூலை 14 ஆம் திகதியன்று இராஜினாமா செய்வதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே காலிமுகத்திடல் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. நேற்றுடன் 100 நாட்களை கடந்தது.



# பாராளுமன்றத்துக்கு பலத்தப் பாதுகாப்பு

ஜனாதிபதி தேர்வுக்கான வாக்கெடுப்பின்போது பாராளுமன்றத்துக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்க வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவுறுத்தி உள்ளது.

பாராளுமன்றத்துக்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யவும், அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகக் கூடியவர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளதாகவும் அந்த அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

கொழும்புக்கு வெளியில் இருந்து பாராளுமன்றத்துக்கு அன்றைய தினம் வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு நாள் முன்பாகவே கொழும்புக்கு வந்து விட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை விசேட அதிரடிப்படையினர் பொலிஸார், இராணுவம், கலகமடக்கும் பொலிஸார் ஆகியோரை பாராளுமன்ற பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஜப்பானுடன் இருதரப்பு ஆலோசனை நிறைவு



இருதரப்பு அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஜப்பானுடனான இருதரப்பு ஆலோசனைகளை இலங்கை முடித்துள்ளது என்று, இலங்கை வெளிவிவகார அமைச்சு, நேற்று (17) தெரிவித்தது.

ஜப்பானின் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட பிரதிநிதிகளுடன் இருதரப்பு ஆலோசனைகளுக்கு வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன தலைமை தாங்கினார்.

ஜப்பானின் வெளிவிவகார அமைச்சின் தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய விவகாரப் பிரிவின் உதவி அமைச்சர் கானோ டேகிரோ தலைமையில் ஜப்பானிய பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இருதரப்பு அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது மற்றும் மக்களுடனான மக்களுடனான உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் இந்த கலந்துரையாடல் கவனம் செலுத்தியது என்று அமைச்சு குறிப்பிட்டது.

இலங்கை தூதுக்குழுவில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், பாதுகாப்பு மற்றும் இலங்கை கடற்படையினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 50 பேர் இதுவரையிலும் இனங்காணப்பட்டனர்

## ஒருவர் வெளிநாட்டுக்கு தப்பியோட்டம்

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, ஜனாதிபதி செயலகம், பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் ஆகியவற்றின் மீது தாக்குதலை மேற்கொண்டு சேதங்களை ஏற்படுத்திய சம்பவங்கள் தொடர்பில் சுமார் 50 பேர் இனம் காணப்பட்டுள்ளனர் தெரிவிக்கப்படுகிறது.

ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளிகள், சிசிடிவி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு இவர்களுக்கு எதிரான ஆதாரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டவர்களில் நபரொருவர் நாட்டை விட்டு தப்பியோடி உள்ளதாகவும் அந்த பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஏனையோரும் நாட்டை விட்டு வெளியேறாது இருப்பதற்கு மேற்குறித்த நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாகப் பயண தடையை பெற்றுக்கொள்ள பொலிஸார் தீர்மானித்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது.





# தவிக்கின்றோம்

டீசல் இன்மையால் அறுவடை செய்யமுடியாலும் அறுவடை செய்த நெல்லினை வீடுகொண்டுபோய் சேர்க்க முடியாமலும் தவிப்பதாக முல்லைத்தீவு விவசாயிகள், தங்களுடைய ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒலுமடு கமநலசேவை நிலையத்தின் கீழுள்ள கற்கிடங்கு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையினை மேற் கொண்டுள்ள விவசாயிகளே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

( சண்முகம் தவசீலன்)

# ரணிலுக்கு மொட்டு ஆதரவு; சாகரவிடம் பீரிஸ் கேள்வி



பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி தெரிவின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிப்பதாக தெரிவிக்கப்பட்டமை குறித்து விளக்கம் கோரி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்திற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி தெரிவின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிப்பதாக நேற்று (15) சாகர காரியவசம் வெளியிட்டிருந்த அறிக்கை தொடர்பில் பேராசிரியர் பீரிஸ் 6 கேள்விகளை முன்வைத்துள்ளார்.

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், எந்த அடிப்படையில் இந்த அறிக்கையை விடுத்தீர்கள் என பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், சாகர காரியவசத்திடம் வினவியுள்ளார்.

இந்த தீர்மானத்தை எடுக்கும் போது கலந்துகொண்டவர்களின் பெயர்களை குறிப்பிட முடியுமா எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் யாப்பின் பிரகாரமா இந்த தீர்மானத்தை எடுத்தீர்கள் என்ற கேள்வி உள்ளிட்ட 6 கேள்விகளுக்கு மிக விரைவில் பதில் வழங்குமாறும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சாகர காரியவசத்தை வலியுறுத்தியுள்ளார்.

# தீயை அணைக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது



நாட்டில் பற்றி எரியும் தீயை அணைப்பதற்கான சந்தர்ப்பம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைத்துள்ளதாக ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்தார்.

நாட்டில் பற்றி எரியும் நெருக்கடி எனும் தீயை அணைப்பதற்கான உரிய நேரம் வந்துவிட்டது. இந்த நெருக்கடி எனும் தீயை அணைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது என்றார்.

எனவே இந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தனிப்பட்ட நோக்கங்களுக்காக செயற்படக்கூடாது. இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு இல்லாத ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும் என்றார்.

அதுபோல ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் போராட்டக்காரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடியவராகவும் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# அமைதியின்மையை ஏற்படுத்தும் இராணுவ வீரர்களே தேவை



நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தும் இராணுவ வீரர்களே அரசாங்கத்துக்கு தேவை என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டபோது அதனை கட்டுப்படுத்துவதற்கு இராணுவ வீரர்கள் தலையீடுகளை மேற்கொண்டு அதனை அமைதிக்கு கொண்டுவந்த சம்பவங்களை நாம் அவதானித்தோம் என்றார்.

இதுபோன்ற இராணுவ வீரர்களே நாட்டுக்கு தேவை. குறிப்பாக பிரதம அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக அமைதியின்மை ஏற்பட்டபோது அங்கிருந்து இராணுவ அதிகாரி ஒருவர் போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தி அமைதியை ஏற்படுத்தியிருந்தார். இந்த இராணுவ வீரர் தற்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனவும் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

அமைதியை ஏற்படுத்தும் இராணுவ வீரர்களுக்குப் பதிலாக நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தும் இராணுவ வீரர்களை அரசாங்கத்திற்கு தேவை என்பது இதன் ஊடாக தெரிகிறது என்றார்.

# ரணில் பாடம் கற்றுக்கொள்வார்



நாட்டு மக்களிடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இம்முறை பாடம் ஒன்றை கற்றுக்கொள்ள போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் செயற்குழு உறுப்பினரான வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

போராட்டத்தை மூழ்கடிக்க பல்வேறு குழுவினர் ஊடுருவியுள்ளதாகவும் போராட்ட களத்தில் தான் உரையாற்றிக் கொண்டிருந்தபோது பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அடியாட்களே இடையூறு விளைவித்தனர் எனவும் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன யானையின் மேல் கட்டப்பட்டுள்ளதாகவும் ரணிலை மஹிந்தவும், மகிந்தவை ரணிலும் காப்பாற்றும் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தினார்.

உயிர்களை கொலை செய்வதற்கும் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதற்கும் மக்கள் விடுதலை முன்னணி எதிரானது எனவும் இது போன்ற செயற்பாடுகளை எமது கட்சி அனுமதிக்காத எனவும் தெரிவித்தார்.

# 3 மணித்தியால மின்வெட்டு




இன்றும் (18) நாளையும் (19) 3 மணித்தியால மின்வெட்டுக்கு பொது பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்டி பகலில் ஒரு மணித்தியாளமும் 40 நிமிடங்களும், இரவில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடங்களும் ABCDEFGHIJKLPQRSTUVW ஆகிய வலயங்களுக்கு மின்வெட்டு அமல்படுத்தப்படும்.

MNOXYZ வலயங்களுக்கு மூன்று மணித்தியாலங்கள் மின்வெட்டு அமல்படுத்தப்படும்போது,

CC வலயத்துக்கு இரண்டு மணித்தியாலங்களும் 30 நிமிடங்களும் காலை 6 மணி முதல் 8.30 மணி வரையில் மின்வெட்டு அமல்ப்படுத்தப்படும் எனவும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# சேதங்களை மதிப்பிட தயாராகிறது அரசாங்கம்



போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டிருந்த ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, பிரதம அமைச்சரின் காரியாலயம் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள சேதம் தொடர்பில் மதிப்பீடு செய்வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை ஆகியவற்றுள் காணப்பட்ட புராதான சொத்துக்கள் பல சேதமடைந்துள்ளதாக தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக தொல்லியல் சட்டங்களுக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்குறித்த மாளிகைகளில் உள்ள புராதான சொத்துக்கள் பலவற்றுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் கூறுகிறது.

ஜனாதிபதித் தெரிவில் முஸ்லிம் கட்சிகள், எவரையும்

# நிபந்தனையின்றி ஆதரிக்கக் கூடாது

### கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை

அஸ்லம் எஸ்.மௌலானா

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ள தெரிவில் முஸ்லிம் கட்சிகள், எந்த வேட்பாளரையும் நிபந்தனையின்றி ஆதரிக்கக் கூடாது என்று, கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

சமூகம் சார்ந்த பிரச்சினைகளை முன்வைத்து, அவற்றுக்குத் தீர்வு தரக்கூடிய வேட்பாளரையே ஆதரிக்க வேண்டும் எனவும் அம் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப், நேற்று (17) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

"தாம் யாரை, எந்த நிபந்தனையுடன் ஆதரிக்கப் போகிறோம் என்பது பற்றி முஸ்லிம் கட்சிகள் எவ்விதமான தெளிவுபடுத்தல்களையும் இதுவரை முன்வைக்கவில்லை.

"குறைந்தபட்சம் தமது கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர்பீட உறுப்பினர்களுடனாவது இவ்விடயம் தொடர்பில் கூடி ஆராய்ந்ததாக தெரியவில்லை. இவர்கள் தாம் சார்ந்திருக்கின்ற அரசியல் கூட்டணிகளின் தீர்மானங்களுடன் ஒத்துப்போகின்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் ஆகியோர், ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் அங்கம் வகிப்பதால் அவர்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க தீர்மானித்திருக்கின்றனர்.

"இந்நிலையில், இவர்களது கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் யாரை ஆதரிக்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை. 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தது போன்று, தலைமைகள் ஒரு புறமும் எம்.பி.க்கள் இன்னொரு புறமும் நின்று வாக்களிக்கப் போகின்றனரா?

"சுயாதீன கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, அக்கூட்டணியின் தீர்மானத்துக்கமைவாக செயற்படுவார் என அறிய முடிகிறது.

"ஜனாதிபதித் தேர்தலில் சமூக ரீதியான எந்தப் பேரம்பேசலுமில்லாமல், தமது சுய அரசியல் இலாபத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு, வலிந்து ஒரு வேட்பாளரை ஆதரிக்கக் கூடாது.

"இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு இன்னொரு வரலாற்றுத் துரோகத்தை செய்து விடாமல், ஜனாதிபதி வேட்பாளர்களிடம் சமூகப் பிரச்சினைகளை முன்வைத்து, அவற்றுக்கு தீர்வு தரக்கூடிய வேட்பாளரையே முஸ்லிம் கட்சிகள் ஆதரிக்க முன்வர வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பஸ் விபத்து;ஒருவர் காயம்

தீஷான் அஹமட்



மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள மல்லிகைத்தீவு பகுதியில் வைத்து , பயணிகளை ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சேவை பஸ் ஒன்று, காலை பாதையை விட்டு விலகி நேற்று (17) விபத்துக்குள்ளானது.

இதில் பயணி ஒருவர் படுகாயமடைந்த நிலையில், மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நீலாப்பொல பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணிகளை ஏற்றிச் சென்ற மூதூர் போக்குவரத்துச் சாலைக்குச் சொந்தமான பஸ்ஸை இவ்வாறு விபத்துக்குள்ளானது.

விபத்துத் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



அம்பாறை மாவட்டத்தில்

## மேலதிக இ.போ.ச பஸ் சேவைக்கு கோரிக்கை

எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்களை மேலதிக சேவையில் ஈடுபடுத்துமாறு, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கரைப்பற்று மற்றும் கல்முனை நகரங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் மந்தகதியில் இயங்குவதாகவும் பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரச மற்றும் தனியார் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும், வைத்தியசாலைகளுக்குச் செல்லும் நோயாளர்களும் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்காக செல்லும் பொதுமக்கள் இ.போ.ச பஸ்களில் நாளாந்தம் பயணிக்கின்றனர்.

எனினும், எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, பஸ் சேவைகள் மந்தகதியில் ஈடுபடுவதால் குறித்த நேரத்துக்கு அவர்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன், காலை வேளையில் வைத்தியசாலைகளுக்கு செல்லும் நோயாளர்கள் பல அசௌகரீகங்களை எதிர்கொள்வதோடு, மன உளைச்சலுக்கும் ஆளாகி வருகின்றனர்.

அக்கரைப்பற்று-அம்பாறை, அக்கரைப்பற்று-கல்முனை, கல்முனை-அம்பாறை ஆகிய மார்க்கங்களில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச

கல்குடா கல்வி நலன்புரி சங்கம்

## அங்குரார்ப்பணம்

எச்.எம்.எம்.பர்ஸான்



கல்குடா கல்வி நலன்புரி சங்க அங்குரார்ப்பண நிகழ்வும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வும், ஓட்டமாவடி தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில், சங்க தலைவர் எஸ்.ஐ.எம்.சாதாத் தலைமையில் நேற்று முன்தினம் (16) நடைபெற்றது.

இதன்போது 23 பாடசாலைகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 46 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வின் அதிதிகளாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, வெளி விவகார அமைச்சின் பணிப்பாளர் என்.எம்.எம். அனஸ், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜே.தாஜுன்நிஸா மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். ஜாபீர் கரீம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், ஓட்டமாவடி வெளிவாரி பட்டப்படிப்புகள் கற்கை நிலையத்தின் இணைப்பாளர் யூ.எம்.பாருக்கின் சேவையை பாராட்டி, பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மக்களின்

## உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்

### எம்.பிக்களிடம் கோரிக்கை

ஹஸ்பர்

பாராளுமன்ற உறுப்பினர்கள், நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டுமென கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம். எம். மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரால் நேற்று (17) வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "நாடும் நாட்டு மக்களும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக காரணமான எவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டாலும் போராட்டங்கள் ஓயப் போவதில்லை.

"போராட்டக்காரர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாற்றமாக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவுசெய்தால், அத் தெரிவுக்கு துணை




ஊழல்வாதிகளுடன்

## இணைந்திருந்தவர்களை கைது செய்யவும்

### மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

ரி.எல்.ஜவ்பர்கான்

ஊழல்வாதிகளுக்கு பின்னாலிருந்து செயபட்டவர்களை கைது செய்யுமாறு கோரி, மட்டக்களப்பு நகரின் காந்திபூங்கா முன்றலில் நேற்று (17) காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது..

இந்த ஆர்ப்பாட்டத்தை மட்டக்களப்பு இளையோர் முன்னணி ஏற்பாடு செய்திருந்தது.

பல்வேறு கோஷங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், ஊழல்வாதிகளுக்குப் பக்கபலமாக இருந்து கொள்ளையட்டித்த சொத்துகளையும் புதிய அரசாங்கம் மீட்டெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

போர் மற்றும் இடப்பெயர்வினால் மூடப்பட்ட பாடசாலைகளை

# மீண்டும் திறக்க கோரிக்கை

நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி - பூநகரி கல்விக் கோட்டத்தில் மூடப்பட்டுள்ள 06 பாடசாலைகளை திறப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் பூநகரியின் பல கிராமங்கள் உவரடைந்தமை, போர் நெருக்கடி, இடப் பெயர்வுகள் காரணமாக தற்போது வரை 06 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீள் குடியேற்றத்துடன் இப்பாடசாலைகளை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தற்போது பூநகரி கல்விக் கோட்டத்தில் உள்ள 24 பாடசாலைகளில் 06 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

பொன்னாவெளி சைவப் பிரகாச வித்தியாலயம், பல்லவராயன்கட்டு இந்து கலவன் பாடசாலை, தம்பிராய் அ.த.க.பாடசாலை, கௌதாரிமுனை அ.த.க.பாடசாலை, அத்தாய் முத்துக்குமாரசாமி வித்தியாலயம் மற்றும் செட்டியகுறிச்சி பாடசாலை என்பன தற்போது மூடப்பட்டுள்ளன.

பூநகரியில் ஏற்பட்ட உவர்ப் பரம்பல் காரணமாக பொன்னாவெளி, பல்லவராயன் பாடசாலைகள் மூடப்பட்டன. ஏனைய பாடசாலைகள் போர், இடப்பெயர்வுகள் காரணமாக மூடப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளை இயக்குவதற்கு போதியளவு மக்கள் தொகை கிராமங்களில் காணப்படவில்லை என்பதே கல்வி அதிகாரிகளின் கருத்தாக காணப்படுகின்றது. பூநகரி




கல்விக் கோட்டத்துக்குள் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் பாடசாலைகளை இயக்கலாம் என்பது மக்களின் கருத்தாக உள்ளது.

கடந்த வாரம் தனியான கோட்டக் கல்வி அலுவலகமும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மூடப்பட்டுள்ள பாடசாலைகளை இயங்க வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

## கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கான அறிவிப்பு

மு.தமிழ்ச்செல்வன்




கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வெளி மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்கு செல்லும் மக்கள் தற்போது ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடி காரணமாக செல்ல முடியாத நிலைமை ஏற்படின் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளுமாறு, மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

மாதாந்த அல்லது ஏனைய சிகிச்சைகளுக்கு செல்லும் பொதுமக்கள், போக்குவரத்து நெருக்கடி காரணமாக மாவட்டத்துக்கு வெளியே செல்ல முடியாத நிலையில் இருப்பின், அவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளலாம்.

அவ்வாறு தொடர்புகொள்ளும் போது மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க முடியுமாயின் அவ்வாறனவர்களுக்கு மாவட்டத்திலேயே சிகிச்சை அளிக்கவும், ஏனையவர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் தாம் நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.



## வங்காலை கிராம மக்கள் போராட்டம்

நானாட்டான் - வங்காலை கிராம மக்கள் சமையல் எரிவாயு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுமார் 900 லிட்ரோ சமையல் எரிவாயு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் வைத்து மக்களுக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏனைய கிராமங்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

எனினும், வங்காலை கிராமத்திற்கு விநியோகிக்கப்படாமல் வேறு கிராமங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இந்த நிலையில் வங்காலை கிராமத்தில் உள்ள 4 கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் வங்காலை பிரதான வீதியை மறித்து எரிவாயு சிலிண்டர்களுடன் நேற்று (17) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, எதிர்வரும் புதன்கிழமை (20) சமையல் எரிவாயுவை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த நிலையில், மக்கள் அமைதியாக சென்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள்

## இணையம் அங்குரார்ப்பணம்

மு.தமிழ்ச்செல்வன்

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் இயங்கும் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களை உள்ளடக்கிய வகையில், வடமாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் இணையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (16) இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

தொடர்ந்து இந்த இணையத்துக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இதன் தலைவராக பருத்தித்துறை மீனவ நண்பன் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் ஜெய்சங்கர் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் சு.சுதர்சன், பொருளாளராக அளவெட்டி மல்லாகம் கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு திலையத்தின் சார்பில் கூட்டுறவுச்சங்க தலைவர் கணேசலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து உப தலைவர் உப செயலாளர் ஆகியோர் ஏனைய மாவட்டங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டனர். இதனை விட நிர்வாக உறுப்பினர்களாக ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.



ஒட்டுசுட்டான் விவசாயிகளுக்கு

## முல்லைத்தீவில் டீசல் வழங்கல்

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அத்திய அவசிய தேவைகளுக்காக டீசல் வழங்கும் நடவடிக்கை இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.

முள்ளியவளை பகுதியில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் முல்லைத்தீவு நகரில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிரப்பு நிலையத்திலும் அத்திய அவசிய தேவைக்கான வாகனங்களுக்கு டீசல் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் விவசாய செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகளின் அறுவடைக்கான டீசல் முல்லைத்தீவில் வழங்கும் நடவடிக்கை, நேற்று (17) முன்னெடுக்கப்பட்டது.

ஒட்டுட்டான் கமநலசேவை திணைக்கள உத்தியோகத்தர் சுகந்தன் தலைமையிலான அதிகாரிகள் பதிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு டீசலை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

முத்தையன்கட்டுக்குளம், 3ஆம் கண்டம் மன்னாகண்டல்,

## கடல் உணவு விலை அதிகரிப்பு

நடராசா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவில் கடல் உணவுகளின் விலை அதிகரித்துள்ளது. எரிபொருள் கிடைக்காததால் பல மீன் பிடிப் படகுகள் கரையில் காணப்படுகின்றன.

இதனால் கடல் உணவுகளின் விலை 2,000 ரூபாயை தாண்டியுள்ளது. கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் எரிபொருளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்திய நிலையில் 2,000 ரூபாய்க்கு எரிபொருள் வழங்கப்பட்டது.

அதன் பின்பு எரிபொருள் வழங்கப்படாததன் காரணமாக கடலுக்கு மீன் பிடிப்பதற்கு கடற்றொழிலாளர்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

சில கடற்றொழிலாளர்களால் மீன் பிடிக்கப்பட்டாலும் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

விநியோக பாதிப்பால்

# விரயமாகும் மரக்கறிகள்

## விலையும் அதிகரித்தது

ரஞ்சித் ராஜபக்‌ஷ

எரிபொருள் நெருக்கடியால் மரக்கறிகளை விநியோகிக்கும் வாகனங்களுக்கு எரிபொருள் கிடைக்காமை காரணமாக, தேசிய சந்தைகளில் மரக்கறிகளின் விலை அதிகரித்து காணப்படுவதாக அகில இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து கொழும்பு மெனிங் சந்தை உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்களுக்கு மரக்கறிகளை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

அத்துடன் தற்போதைய நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாமல் இருப்பதால் மரக்கறிகள் பழுதடைந்து விரயமாவதாகவும் தெரிவித்தார்.



தற்போது உள்நாட்டு சந்தைகளில் காய்ந்த மிளகாய் ஒரு கிலோகிராம் 1200 ரூபாய்க்கும் உள்ளூர் உருளைக்கிழங்கு 550 ரூபாய்க்கும் மாலுமிரிஸ்- 850 ரூபாய்க்கும் போஞ்ச்- 500, கெரட்- 400 ரூபாய், தக்காளி- 320 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சட்டவிரோத மாணிக்ககல்

# அகழ்ந்த இருவர் கைது

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்கட்பட்ட பெட்ரசோ தோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் நேற்றுமுன்தினம் (16) இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலுக்கமைய இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் 20 மற்றும் 53 வயதுடையவர்கள் என்றும் இவர்கள் பொகவந்தலாவைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் ஹட்டன் நீதிமன்றில் நாளை (19) முன்னிலையாகுமாறு தெரிவித்து, பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கிளங்கன் வைத்தியசாலை வளாகத்தில்

# கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரிப்பு

சுதத்.எச்.எம்.ஹேவா

டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலை வளாகத்துக்குள் திரியும் கட்டாக்காலி நாய்களால், வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் அவர்களைப் பார்வையிட வருபவர்களும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர்.



வைத்தியசாலை வளாகத்தின் ஒரு பகுதிக்குள் அதிகமான கட்டாக்காலி நாய்கள் திரிவதாகவும் இதனால் வைத்தியசாலை பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாகவும் வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் குறித்த நாய்கள் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிலுள்ள ஆசனங்களில் படுத்திருப்பதால், வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் வேறு நோய்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் உறுப்பினர் சசி ரத்நாயக்க கருத்து தெரிவிக்கையில், இவ்வாறு வைத்தியசாலை வளாகத்தில் கட்டாக்காலி நாய்கள் திரிவதை தானும் அவதானித்ததாகவும் இது தொடர்பில் நகர சபையின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகவும் தெரிவித்தார்.

மஸ்கெலியாவுக்கு

# எரிபொருள் கிடைக்கவில்லை

செ.தி பெருமாள்

கடந்த ஒரு மாதமாக மஸ்கெலியாவில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு எரிபொருள் கிடைக்கவில்லை. இதனால் சாரதிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா நகரை அண்மித்து, சுமார் 70,000 ஆயிரம் மக்கள் வாழும் நிலையில், இங்கு ஐ,ஓ. சிபெற்றோல் நிலையம் இல்லாமை பாரிய பிரச்சினையாகவுள்ளது.

மஸ்கெலியாவிலிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தூரத்தில் ஹட்டன் நகரில்தான் இரண்டு ஐ.ஓ.சி பெற்றோல் நிலையங்கள் காணப்படுகின்றன.



எனவே மஸ்கெலியா நகருக்கு மண்ணெண்ணை, டீசல், பெற்றோல் மற்றும் எரிபொருளை விநியோகிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.







# பன்விலைக்கும் கிடைத்தன

தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள நிவாரணப் பொருட்கள், பன்விலை பிரதேச செயலக பிரிவுக்குள் வாழும் மக்களுக்கு நேற்று (17) பகிர்ந்தளிக்கப்பட்டன. (மெய்யன்)



சுகாதாரப் பிரிவினருக்கு முன்னுரிமை அளித்ததால்

# வீதியை மறித்த நாவலப்பிட்டி மக்கள்

ரஞ்சித் ராஜபக்‌ஷ

நாவலப்பிட்டி நகரிலுள்ள கூட்டுறவு எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு , நேற்று முன்தினம் (16) சுகாதாரப் பிரிவினருக்கு விநியோகிப்பதற்காக 6600 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டதால், பல நாள்களாக வரிசையில் காத்திருக்கும் தமக்கும் பெற்றோலை வழங்குமாறு கோரி, எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கண்டி- நாவலப்பிட்டி பிரதான வீதியை மறித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், தாம் பல நாள்களாக வரிசையில் காத்திருந்த போதிலும் சுகாதாரப் பிரிவினருக்கு முன்னுரிமையளித்து எரிபொருள் விநியோகிக்கப்படுவதாக குற்றஞ்சுமத்தினர்.

அத்துடன் சுகாதாரப் பிரிவினருக்கு எரிபொருளை விநியோகிக்க இடமளிக்கமாட்டோம் என்றனர்.

இதன்போது நாவலப்பிட்டி பொலிஸ் அதிகாரிகள், இந்த விடயம் தொடர்பாக நாவலப்பிட்டி பொது வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பிரிவினருடன் கலந்துரையாடலை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து,அவர்களின் இணக்கப்பாட்டுடன் 6600 லீற்றர் பெட்ரோலில் 1,000 லீற்றரை வரிசையில் காத்திருந்தவர்களுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து ஆர்ப்பாட்டமும் கைவிடப்பட்டது.

மலையகத்தில் எரிபொருள் நிலையங்களில்

# பொலிஸ் அதிகாரியின் அட்டூழியம்

ரஞ்சித் ராஜபக்‌ஷ

நுரெலியா மாவட்டத்துக்குள் கடமையில் ஈடுபட்டிருக்கும் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரியொருவர், முன்னெடுக்கும் பெட்ரோல் வியாபாரத்தால் எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பொலிஸ் அதிகாரி அத்தியாவசிய தேவைக்காக பெட்ரோலை ஒதுக்குமாறு, எரிபொருள் நிலைய உரிமையாளர்களிடம் தெரிவிப்பதாகவும் அவ்வாறு ஒதுக்கும் பெட்ரோலில் சிறு அளவை மாத்திரம் அத்தியாவசிய சேவைகளுக்கு விநியோகிக்குமாறு தெரிவித்து மிகுதியை இரவோடிஇரவாக பெரல்களில் குறித்த அதிகாரியின் வீட்டுக்கு ஏற்றிச் செல்வதாக எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சகல எரிபொருள் நிலையங்களிலும் குறித்த பொலிஸ் அதிகாரி இவ்வாறு மோசடியில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த பொலிஸ் அதிகாரி எரிபொருள் நிலையங்களுக்குச் சென்று, எரிபொருள் விநியோகம் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்களை மிரட்டி இவ்வாறு எரிபொருள் மோசடியில் ஈடுபட்டு வருகின்றார்.

இதற்கு மேலதிகமாக நுவரெலியா மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் போது, குறித்த பொலிஸ் அதிகாரியின் உறவினர்கள், நண்பர்கள், கடமைகளில் ஈடுபடும் பொலிஸாருக்கும் தனியாக எரிபொருள் வழங்கப்படுவதாகவும் எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



கடும் டயர் பற்றாக்குறையால்

# 20 பஸ்கள் ஓடவில்லை

சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன்- இ.போ.ச டிப்போவில் பஸ்களுக்கான டயர்களுக்கு பாரிய தட்டுபாடு ஏற்பட்டுள்ளதால் இதுவரை 20 பஸ்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் ஹட்டனிலிருந்து தலவாக்கலை, பொகவந்தலாவை, மஸ்கெலியா, காமிமலை போன்ற குறுகிய இடங்களுக்கான பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், பயணிகளும் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

எரிபொருள் நெருடிக்கடியால் தனியார் பஸ் சேவைகள் உரிய முறையில் இடம்பெறாத நிலையில், இ.போ.ச பஸ் சேவைகளும் குறைக்கப்பட்டுள்ளதால் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே ஹட்டன் பஸ் டிப்போவில் நிலவும் கடுமையான டயர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு உரிய தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், அது எப்போது நிவர்த்தி செய்யப்படும் என உரியமுறையில் அறிவிக்கப்படவில்லை என்றும் ஹட்டன் டிப்போவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹட்டனில் தனியார் பஸ்களுக்கு

# இ.போ.ச எரிபொருள்

ரஞ்சித் ராஜபக்‌ஷ

ஹட்டன் இ.போ.ச பஸ் டிப்போ மூலம் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் நேற்று முன்தினத்திலிருந்து விநியோகிக்கப்பட்டது.

ஹட்டனிலிருந்து குறுகிய, நீண்ட தூர சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கே நேற்று முன்தினம் (16) எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

கொட்டகலை எரிபொருள் கூட்டுதாபனத்தின் களஞ்சியசாலைக்கு எரிபொருள் கிடைக்கப்பெற்றதை அடுத்து, ஹட்டன் டிப்போவுக்கும் தனியார் பஸ்களுக்கு தேவையான எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



இதன்போது எவ்வித மட்டுபாடுகளுமின்றி எரிபொருள் விநியோகிக்கப்பட்டதுடன், கடந்த 15 நாள்களாக எரிபொருள் இன்மையால் சேவையில் ஈடுபடாத தனியார் பஸ்கள் ஹட்டன் நகரம் மற்றும் நகரை அண்மித்த பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மிளகுத் தோட்டத்துக்குச் சென்றவர்

# சடலமாக மீட்கப்பட்டார்

ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கபுர பிரதேசத்தில் நபர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் என ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த நபர் தனது வீட்டிலிருந்து மிளகு உற்பத்தி செய்யப்படும் தோட்டத்துக்கு 13ஆம் திகதி சென்றிருந்த நிலையில், மிளகுச் செடிகளுக்கு மத்தியில் உயிரிழந்துள்ளார் என ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் 84 வயதான போகஹமடின்ன பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், உயிரிழப்புக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்றும் தெரிவித்த ஹாலிஎல பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நுகவெல எரிபொருள் நிரப்பும் நிலையத்தில்

# குண்டர்கள் அடாவடி

சேஹ்ரன் செனவிரத்ன

கண்டி- நுகவெல எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு 3 வாரங்களுக்கு பின்னர் நேற்று முன்தினம்(16) எரிபொருள் கொண்டு வரப்பட்ட நிலையில், ஒரு வாரத்துக்கும் அதிகமாக வரிசையில் காத்திருந்த சுகாதார தரப்பினருக்கு எரிபொருள் விநியோகிக்கப்படாமையால், அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அத்துடன் தடி, பொல்லுகளுடன் வருகைத் தந்த சிலர் வரிசையில் காத்திருந்த சுகாதாரப் பணியினரை விரட்டும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டதால் குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

16ஆம் திகதி சுகாதார பணியாளர்களுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதால், ஒரு வாரமாக சுகாதார பணியாளர்கள் அங்கு வரிசைகளில் காத்திருந்தனர்.



இந்த நிலையில் எரிபொருள் கொள்கலன் ஒன்று அங்கு வருகைத் தந்தவுடன், தடி, பொல்லுகளுடன் அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்த சிலர், பலவந்தமாக எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தமையால் அமைதியின்மை ஏற்பட்டதுடன், கண்டி- குருநாகல் வீதியில் கடும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

# பதில் ஜனாதிபதியின் நிவாரணம் புழுவாய் இருந்துவிடக்கூடாது

பாரிய வெள்ளம் கரைபுரண்டு ஓடியதன்பின்னர், எஞ்சியிருக்கும் மீன்கள் எதிர்நீச்சல் போடும், அப்போது எவையெல்லாம் வாய்க்கு கிடைக்கிறதோ, அவற்றையெல்லாம் உண்ணுவதற்கு மீன்கள் முயற்சிக்கும். அதேபோலதான் எமது நாட்டு மக்களில் பெரும்பாலானவர்களின் நிலைமையும் இருக்கிறது.

யாராவது நிவாரணம் கொடுக்கமாட்டார்களா? எதாவது இலாபமாக கிடைக்காதா, அன்னதானம் எங்கே வழங்குகின்றார்கள் இதுபோன்ற சிந்தனையே இருக்கும். அந்தளவுக்கு விலைகள் தலைதூக்கி ஆடுகின்றன.

வேலையில்லாத் திட்டமும் மறுபக்கத்தில் வாட்டி வதைக்கிறது. மாதச் சம்பளத்தில் பணிகளில் இருப்போர், அனாவசியமான செலவுகளைக் குறைத்து, வாயையும் வயிற்றையும் கட்டுப்படுத்தி வாழ்க்கையை கொண்டு நடத்திச் செல்கின்றனர்.

அரசியல் ஸ்திரமின்மை ஒரு பக்கத்தில் தளம்பிக்கொண்டிருக்கையில், பொருளாதார நெருக்கடி, மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. எதற்கெடுத்தாலும் வரிசையில் நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே காணப்படுகின்றது. சேவைகளின் கட்டணங்களும் எகிறியிருக்கின்றமையால், பொதுப் போக்குவரத்தைக் கூட பயன்படுத்துவதில் மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

சீரான கட்டணங்களும் அறவிடப்படுவதில்லை, ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் மிகுதிப்பணத்தையும் சில்லறையில்லை எனக்கூறி நடத்துனர்கள் நழுவிவிடுகின்றனர். ஒரே தூரத்துக்கு ஒவ்வொரு பஸ்களிலும் வெவ்வேறான கட்டணங்கள் அறவிப்படுகின்றன. குறுகிய தூரங்களில் சேவைகளில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களில் நடத்துனர்கள் சிலர், பணத்தை வாங்கிக்கொண்டு பயணச்சீட்டை வழங்குவதில்லை.

சம்பளங்களோ, கொடுப்பனவுகளோ அதிகரிக்கப்படவில்லை. எனினும், ஒவ்வொரு பொருட்களின் விலைகளும் பன்மடங்குகளால் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே, பதில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க “நிவாரணப் பொதி” அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

இது ஒரு வரபிரசாதமாகும். அதனையும், வறுமைக்கோட்டுக்கு கீழே வாழ்வோருக்கு மட்டும், அரச பணியாளர்கள் குடும்பங்களுக்கு இல்லை. இவ்வாறு வகைப்பிரித்து வழங்குவதற்கு முயற்சிக்கக்கூடாது. ஏனெனில். பொருளாதார நெருக்கடியால், மத்தியத்தர வர்க்கத்தினரும் அதற்கு கீழிருப்போரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஓகஸ்ட் இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படவிருந்த நிவாரணமே, அவசர நிவாரணமாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எதுவாக இருப்பினும். வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தவேண்டும்.

ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்கெடுப்பு, ஜூலை 20ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது. அதனை நோக்கிய காய்நகர்த்தலாகவும் மக்களின் மனங்களை வெல்வதற்கான தூண்டிலாகவும் இந்த அவசர நிவாணப் பொதி அறிவிப்பு இருந்துவிடக்கூடாது.

பசி, பட்டினியால் காத்திருக்கும் மக்களுக்கு தூண்டிலில் குத்தப்படும் புழுவாக பதில் ஜனாதிபதியின் நிவாரணப் பொதி அமைந்துவிடக்கூடாது. அடுத்தடுத்த மாதங்களுக்கு விலை அதிகரிக்கும் எண்ணத்தில், இந்த அவசர நிவாரணப் பொதி மலர்ந்திருக்கக்கூடாது என்பதையும் நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# அடுத்த ஜனாதிபதி எப்படி தெரிவு செய்யப்படுவார்?



என்.கே. அஷோக்பரன்

அரசியலமைப்பின் 38(1)(ஆ) சரத்தின் பிரகாரம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவி விலகல் கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பி வைத்ததன்படி, இலங்கையின் ஜனாதிபதி பதவி வெற்றிடமானது. இதனைத் தொடர்ந்து, அரசியலமைப்பின் 40(1)(இ) சரத்தின் படி, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, மிகுதிப் பதவிக்காலத்திற்காக அடுத்த ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் வரை, பதில் ஜனாதிபதியாகியுள்ளார்.

ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகும் பட்சத்தில், எஞ்சியுள்ள பதவிக்காலத்திற்கு ஜனாதிபதியொருவரை தேர்ந்தெடுப்பது தொடர்பில், அரசியலமைப்பின் 40வது சரத்தும், 1980ம் ஆண்டின் 2ம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமும் உரிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ள இந்த நிலையில், இலங்கையின் அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்வது பாராளுமன்றமே (அதாவது பாராளுமன்ற உறுப்பினர்களே). அரசியலமைப்பின் பிரிவு 40(1)(அ) மற்றும் 1980ம் ஆண்டின் 2ம் இலக்க சட்டத்தின் பிரிவு 3(1) ஆகியன பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களில், ஜனாதிபதியாவதற்கு அரசியலமைப்பு கூறும் தகுதிகளைக் கொண்ட, ஒரு பாராளுமன்ற உறுப்பினரை ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வழங்குகிறது. அந்தத் தேர்தலானது, ஜனாதிபதி பதவி வெற்றிடமான திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் புதிய ஜனாதிபதி, பதவி விலகிய ஜனாதிபதியின் பதவிக் காலத்தின் எஞ்சிய காலப்பகுதிக்கான, அதாவது 2024 நவம்பர் வரை பதவியிலிருப்பார்.

பாராளுமன்றம் புதிய ஜனாதிபதியை எவ்வாறு தேர்ந்தெடுக்கும்?

## பாராளுமன்றம் கூடுதல்

ஜனாதிபதி பதவி விலகியவுடன், மூன்று நாட்களுக்குள் பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும். திகதி மற்றும் நேரத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகம், எம்.பிக்களுக்குஅறிவிக்க வேண்டும் என 1980ம் ஆண்டின் 2ம் இலக்க சட்டத்தின் பிரிவு 4 வழங்குகிறது. ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ளதை பாராளுமன்றத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பதுடன். அடுத்த ஜனாதிபதியை பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுப்பதற்கான வேட்புமனுக்களுக்கான திகதியாக, அன்றிலிருந்து 48 மணிநேரத்திற்கு குறையாத, ஏழு நாட்களுக்கு அதிகரிக்காத திகதியையும், நேரத்தையும் நிர்ணயம் செய்வார் (பிரிவு 5).

## வேட்புமனு

வேட்புமனுத் தினத்தில், பாராளுமன்றம் கூடும் போது, செயலாளர் நாயகம் தேர்தல் அதிகாரியாகச் செயற்படுவார். ஜனாதிபதி பதவிக்கு குறித்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க விரும்பும் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர், அவர் முன்மொழிய விரும்பும் உறுப்பினரின் முன் எழுத்துப்பூர்வ ஒப்புதலைப் பெற வேண்டும். அதன்பின்னர், அந்த உறுப்பினர், தான் முன்மொழிய விரும்பும் உறுப்பினரின் பெயரை ஜனாதிபதி பதவிக்காக முன்மொழிவார். இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் அதனை வழிமொழிய வேண்டும். இதில் விவாதத்திற்கு இடமில்லை. இவ்வாறு, ஜனாதிபதி பதவிக்காக ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் மட்டும் முன்மொழிந்து, வழிமொழியப்படும் போது, அவர் ஜனாதிபதி பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவிப்பார். ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் முன்மொழிந்து வழிமொழியப்படும்போது, பாராளுமன்ற செயலாளர் நாயகம், அன்றிலிருந்து 48 மணி நேரத்திற்கு மிகாத காலத்திற்குள் தேர்தலை நடத்த வேண்டும். அதற்கான திகதியையும், நேரத்தையும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவிப்பார். (பிரிவு 6).

## தேர்தல்

தேர்தல் இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்தப்படும். இந்தத் தேர்தலில் விசேடத் தன்மை யாதெனில், சபாநாயரும், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் வாக்களிப்பில் கலந்துகொள்வார். வாக்குப்பதிவு முடிவடைவதற்கு முன், முதலில் வாக்களிக்காத எந்த உறுப்பினரின் பெயரையும் இரண்டாவது முறையாக தேர்தல் அதிகாரி அழைப்பார். அத்தகைய உறுப்பினர் தனது பெயர் இரண்டாவது முறை அழைக்கப்பட்ட பிறகும் கூட வாக்களிக்கவில்லை என்றால், அவர் வாக்களிப்பதில் இருந்து விலகியதாகக் கருதப்படுவார். (பிரிவு 7).

## வாக்களிக்கும் முறை

மக்கள் வாக்களிக்கும் முறையை ஒத்த முறையிலேயே, பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிப்பார்கள். அதாவது இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஜனாதிபதிப் பதவிக்காக முன்மொழியப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், பாராளுமன்ற உறுப்பினர்கள் 1, 2 என்றவாறு முன்னுரிமைத் தெரிவு அடிப்படையில் வாக்களிக்க முடியும். தனது முதலாவது, அல்லது ஒரே தெரிவிற்கு முன்னால் “1” என்று இலக்கமிட்டு வாக்களிக்க வேண்டும். இரண்டிற்கு மேற்பட்டவர்கள் போட்டியிடும் போது, அடுத்த தெரிவுகளை 2, 3 என்று குறிப்பிட்டுத் தெரிவிக்க முடியும். (பிரிவு 8).

## வாக்கெண்ணிக்கை

தேர்தல் அதிகாரி வாக்குச் சீட்டுகளை ஆய்வு செய்து, செல்லாத வாக்குச் சீட்டுகளை நிராகரித்த பிறகு, மீதமுள்ள வாக்குச் சீட்டுகளை ஒவ்வொரு வேட்பாளருக்கும் பதிவு செய்யப்பட்ட முதல் (“1”) விருப்பத்தேர்வுகளின்படி பிரிக்க வேண்டும். ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட முதல் விருப்பத் தேர்வு வாக்குகளின் எண்ணிக்கையை அவர் கணக்கிடுவார். (பிரிவு 10).

எந்தவொரு வேட்பாளரும் பதிவான செல்லுபடியாகும் வாக்குகளில் பாதிக்கு மேல் பெற்றிருந்தால், தேர்தல் அதிகாரி, அத்தகைய வேட்பாளரை ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்க வேண்டும். (பிரிவு 11).

எந்தவொரு வேட்பாளரும் பதிவான செல்லுபடியாகும் முதல் விருப்பத் தேர்வு வாக்குகளில் பாதிக்கு மேல் பெறாதிருந்தால், ஆகக் குறைந்த முதல் விருப்பத் தேர்வு வாக்குகளைப் பெற்றுக்கொண்டவர், போட்டியிலிருந்து நீக்கப்பட்டு, அவருடைய வாக்குச் சீட்டுக்களில் இரண்டாவது (“2”) விருப்பத் தேர்வு வாக்குகள் எண்ணப்பட்டு, அவற்றில் மற்றைய வேட்பாளர்கள் பெற்றுள்ள இரண்டாவது விருப்பத் தேர்வு வாக்குகள், அவர்கள் பெற்றுக்கொண்ட முதல் விருப்பத் தேர்வு வாக்குளுடன் சேர்ந்து கணக்கிடப்படும். இப்படியாக ஒரு வேட்பாளர் பதிவான செல்லுபடியாகும் வாக்குகளில் பாதிக்கு மேல் பெறாத நிலையில், குறைந்த வாக்குளைப் பெற்றவர்கள் ஒன்றொன்றாக நீக்கப்பட்டு, அவர்களுடைய இரண்டாம் விருப்புவாக்கு அல்லது, இரண்டாம் விருப்பு வாக்கு பெற்றவரும் போட்டியிலிருந்து ஏலவே நீக்கப்பட்டிருந்தால், மூன்றாவது விருப்பு வாக்கு என்றவாறு அவை கணக்கெடுக்கப்பட்டு குறித்த வேட்பாளர்களின் வாக்குகளோடு ஒன்று சேர்க்கப்படும். இவ்வாறு எண்ணிய பின்னரும், எண்ணிக்கையின் முடிவில் எந்த வேட்பாளரும் செல்லுபடியாகும் வாக்குகளில் பாதிக்கு மேல் பெறவில்லை என்றால், அந்த எண்ணிக்கையில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற வேட்பாளரை தேர்தல் அதிகாரி ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்க வேண்டும். (பிரிவு 12).

இரண்டு வேட்பாளர்கள் சம அளவிலான வாக்குகளைப் பெற்றிருந்தால், தேர்தல் அதிகாரி தான் தீர்மானிக்கும் வகையிலான லொத்தர் ஒன்றின் மூலம், அந்த இருவரில் ஒருவரை ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுப்பார். (பிரிவு 13)


ஜனாதிபதி பதவிக்கு பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட வேட்பாளரின் பெயரை, அத்தகைய தேர்தல் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் வர்த்தமானியில் வெளியிட வேண்டும். (பிரிவு 17)

## கள நிலவரம்

தற்போதைய களநிலவரத்தின்படி, ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திசாநாயக்க, டளஸ் அழகப்பெரும ஆகியோரின் பெயர்கள் ஜனாதிபதிப் பதவிக்கு முன்மொழியப்படலாம் என்று தெரிகிறது. இன்றைய நிலையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி யாருக்கும் ஆதரவில்லை என்று அறிவித்திருக்கிறது. தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்கள் நிலைப்பாட்டினை இன்னும் அறிவிக்கவில்லை.

ஆகவே எத்தனை பேர் வாக்களிக்கப்போகிறார்கள். எத்தனை பேர் வாக்களிப்பை புறக்கணிக்கப் போகிறார்கள் என்பது இன்னும் தெரியவில்லை. எத்தனை பேர் மொத்தம் செல்லுபடியான முறையில் வாக்களிக்கிறார்கள் என்பதில்தான், ஒருவர் முதல் சுற்று வாக்கெடுப்பிலேயே ஜனாதிபதியாவதற்கு எத்தனை வாக்குகள் தேவை என்பதைச் சொல்ல முடியும். 225 பேரும் செல்லுபடியான முறையில் வாக்களித்தால், ஜனாதிபதியாவதற்கு, ஒருவருக்கு 113 முதல் விருப்புரிமை வாக்குகள் தேவை. வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை குறையக் குறைய, வெற்றிக்கான எண்ணும் குறையும். 200 பேர் மட்டுமே செல்லுபடியான முறையில் வாக்களித்தால், வெற்றிக்கான எண் 101 ஆகும்.

களம் தயார். அடுத்த ஜனாதிபதி யார் என்பது இந்த வாரம் நிச்சயமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

மக்களில் பலருக்கு சுதந்திரம் என்பது எது, சுதந்திரம் இன்மை என்பது எது எனத் தெரியாமலேயே வாழ்கின்றார்கள். இருக்க வீடு, கொஞ்சம் பணம், சாப்பிட உணவு எனுமாறு வசதிகள் பெரிதும் இல்லாதவர்கள், எவ்வித சிந்தனையும் இன்றி இருக்கிறார்கள். வசதி படைத்தோர் எதுபற்றியும் கவலைப்படுவதில்லை.

எந்த அரசாங்கம் வந்து போனாலும், அவை என்ன செய்தார்கள் என்பதும் புரிவதில்லை. எல்லா ஆளும் கட்சிகளும் சொன்னவற்றைச் செய்வதில்லை. சுதந்திரம் அனைவருக்குமான பொது உடமை.

இவ்விடயத்தில், பெரும்பான்மை, சிறுபான்மை என்கிற பேதம் கடையாது. முன்னேறியுள்ள நாடுகள் போல, ஏன் எங்களால் மாறமுடியவில்லை எனக் கேள்வி கேட்பதுமில்லை.

எமது நாடு சகல வளங்களும் கொட்டடது. ஆனால், ஏன் பொருளாதார சுபீட்சம் காண முடியாமல் இருக்கின்றது? மேலை நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகளில், பெரும்பான்மை சிறுபான்மை என எல்லோருக்கும் உரிமைகள் ஒன்றுதான்; பேதங்கள் இல்லை. ஆனால் எமது நாட்டில், இனம், மதம், மொழி பேதங்கள் காண்பதால் முன்னேற முடியாமல் தவிக்கின்றது. பொருளாதாரம் மேம்படல் வேண்டும். யுத்தம், போராட்டம், வேலைநிறுத்தம், கடன்பெறுதல் இருந்தால் எப்படி நாடு செழிக்கும்? சிந்திக்க செயல்பிறக்கும்.

– பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சிறுபோகம் பாதிப்பு

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவில், திருக்கோவில் ஆகிய பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசிய எரிபொருள் விநியோகத்திட்டத்தின் கீழ் சில எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்குவதற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தும் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக எரிபொருள் வரவில்லை.

எரிபொருள் தட்டுப்பாடு இல்லாமல் நெல் அறுவடை சீராக நடைபெற வேண்டுமென்பதற்காக சகல விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20 லீட்டர் டீசல் கிரமமான முறையில் வழங்குவதற்கு எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சில பிரதேசங்களில் விவசாயிகள் எரிபொருளை பெற்று கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இம்முறை ஏக்கர் ஒன்றுக்கு அறுவடை கூலி 20 ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் வரை காணப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(எம்.எஸ்.எம். ஹனீபா)




இலங்கையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்காக

# SLT-MOBITEL அழைப்பு

22 மில்லியன் இலங்கையர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் தேடலில், SLT-MOBITEL, 'Dreamers' - தொலைநோக்கு கொண்டவர்கள், கண்டுபிடிப்பாளர்கள், புத்திசாலிகள் மற்றும் வழமைக்கு அப்பால் சிந்திக்கக்கூடியவர்கள் என சகல தரப்பினரையும் தமது செயற்படும் தீர்வுகளுடன் முன்வந்து, இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சிக்க கைகோர்க்குமாறு அழைப்புவிடுத்துள்ளது.

SLT-MOBITEL இனால் தனது #NoDreamTooBig எனும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக அனைத்து இலங்கையர்கள் வசமும் காணப்படும் அதே தொழில்நுட்பம் மற்றும் இணைக்கப்பட்ட சாதனங்கள் போன்றவற்றை பயன்படுத்தி புத்தாக்கமான முறையில் பாரிய கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்காக பணியாற்ற இணையுமாறு அழைத்துள்ளது. இந்த உறுதியற்ற காலப்பகுதியிலிருந்து நாம் விடுபட்டு ஒரு இலங்கையாக முன்னேற்றத்தை நோக்கி பயணிக்க தேவையான கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் இந்த Dreamers Wanted திட்டத்துடன் இணையுமாறு SLT-MOBITEL அழைத்துள்ளது.

தமக்குக் காணப்படும் அறிவு, வளங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சாதாரணமானவற்றைக் கொண்டு அசாதாரணமானவற்றை உருவாக்க முனையும் விண்ணப்பதாரிகளுக்கு wsltmobitel.lk/dreamerswanted எனும் இணையப்பக்கத்துக்கு சென்று தமது தொழிற்படக்கூடிய தீர்வு அல்லது கண்டுபிடிப்பு தொடர்பான விளக்கமளிக்கும் சிறிய வீடியோ ஒன்றை தயாரித்து சமர்ப்பிக்குமாறு கோரப்படுவர். தமது தெரிவுக்குரிய மொழியில் இதனை அவர்களால் சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் சுயமான அறிவுறுத்தல் அவர்களுக்கு வழங்கப்படும்.

Dreamers Wanted Evaluation Team (DWET) என்பதில் SLT-MOBITEL அதிகாரிகள் மற்றும் உள்நாட்டு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்விசார் நிபுணர்கள் ஆகியோர் அடங்கியிருப்பதுடன், விண்ணப்பங்களை மீளாய்வு செய்து தெரிவு செய்யும் பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பார்கள். அதனூடாக மேலதிக மேம்படுத்தலுக்காக சிறந்த சிந்தனைகள் தெரிவு செய்யப்படுவது உறுதி செய்யப்படும். தெரிவு செய்யப்பட்டதும், நேர்காணல்கள், விளக்கமளிப்பு நிகழ்வுகள் மற்றும் மாதிரி விளக்கங்கள் மற்றும் வினா விடை அமர்வுகளுக்கு முகங்கொடுப்பார்கள். அதனூடாக சிறந்த கண்டுபிடிப்புகள் தெரிவு செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டு, அவை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான ஆதரவு உடனடியாக வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

SLT-MOBITEL இன் முன்னணி குழும R&D செயற்திட்டமான 'The Embryo'இனால், SLT குழுமம் மற்றும் கல்விமான்கள், தொழிற்துறை, ஒன்றிணைப்பாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்கள் என பல தரப்பினரையும் ஒன்றிணைத்து தேசத்துக்கு சேவையாற்றுவதற்கான பெறுமதியான அறிவு மற்றும் திறன்கள் பகிர்வு முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், பன்நாளிகை புத்தாக்க கட்டமைப்பை நவீன தொழில்நுட்ப தீர்வுகளைப் பின்பற்றி முன்னெடுத்துச் செல்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இந்த அமைப்பினால் 'Dreamers Wanted' திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. புத்தாக்கத்தை உள்வாங்கியதன் பின்னர், 'Dreamers'உடன் இணைந்து தேசத்தின் தேவைகளின் பிரகாரம் SLT-MOBITEL செயலாற்றும். வங்கிகள், முதலீட்டாளர்கள், SLT-MOBITEL விற்பனை மற்றும் இதர விநியோக வலையமைப்புகள் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு தீர்வை செயற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும். SLT-MOBITEL இடமிருந்து நிறுவனசார் ஆதரவை Dreamers பெறுவார்கள். இதில் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை, ஏதேனும் பிரச்சனைகளிலிருந்து மீள்வதற்கு அவசியமான ஒழுங்குபடுத்தல் ஆலோசனை, நிதி ஆதரவு மற்றும் உட்கட்மைப்பு நிறுவுகை போன்றன அடங்கியிருக்கும்.

கூட்டாண்மை வெளிப்படையான அறிக்கையிடல்

# தரப்படுத்தலில் யூனியன் அஷ்யூரன்ஸ்

வெளிப்படையான அறிக்கையிடலுக்காக யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, கூட்டாண்மை அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மையை பேணும் சிறந்த 10 நிறுவனங்கள் வரிசையில் தெரிவாகியுள்ளது. இந்த வரிசையில் தெரிவாகிய முதல் காப்புறுதி சேவை வழங்குநராக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்காவின் (TISL) 2022 ஆம் ஆண்டு அறிக்கையில் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட TISL அறிக்கையில், யூனியன் அஷ்யூரன்ஸ் 8 ஆம் ஸ்தானத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இந்த அறிக்கையில் 16ஆம் ஸ்தானத்தில் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. நிறுவனத்தினால் பின்பற்றப்படும் கடுமையான வெளிப்படையான அறிக்கையிடல் செயன்முறைகளுக்கு கிடைத்த சான்றாக இது அமைந்துள்ளது.

சந்தை மூலதனவாக்கத்தின் பிரகாரம், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட 75 நிறுவனங்களை மதிப்பாய்வு செய்து இந்த தரப்படுத்தல் வழங்கப்பட்டிருந்தது. கூட்டாண்மை தரவுகள் வெளிப்படுத்தல் செயன்முறை தொடர்பில் சுயாதீனமாக முன்னெடுக்கப்படும் மதிப்பாய்வாக இது அமைந்திருப்பதுடன், மோசடி தவிர்ப்பு மற்றும் மோசடிகளுக்கு எதிரான செயற்பாடுகள் மோசடி தவிர்ப்பு நிகழ்ச்சிகள் பற்றிய அறிக்கையிடல், நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான வெளிப்படைத்தன்மை மற்றும் உள்நாட்டு செயற்பாடுகள் தொடர்பான பிரதான நிதித் தகவல்கள் போன்றவற்றின் அடிப்படையில் நிறுவனங்களை தரப்படுத்தியிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிதி அதிகாரி ஆஷா பெரேரா கருத்தத் தெரிவிக்கையில், "கூட்டாண்மை கடப்பாடு என்பதில் உறுதியான கலாசாரத்தை நிறுவனம் கொண்டுள்ளது. சகல பங்காளர்கள் மத்தியில் இதனூடாக நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டுள்ளமை மாத்திரமன்றி, எமது ஊழியர்களையும் வியாபாரத்தையும் பாதுகாத்துள்ளதுடன், எமது வர்த்தக நாமத்தை மேம்படுத்திக் கொள்ள உதவியுள்ளது." என்றார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், "நிறுவனத்தினுள் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கும் கொள்கைகளினூடாக அனைவரும் வழிநடத்தப்படுகின்றனர். கூட்டாண்மை ஆளுகை கட்டமைப்பினூடாக மோசடி மற்றும் இதர எல்லை மீறல்கள் போன்றன இடர்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஒழுக்கமான கலாசாரம், சிறந்த உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ பொறிமுறைகள் போன்றவற்றை நாம் கொண்டுள்ளோம். இவற்றினூடாக நிலைபேறான பெறுமதி ஏற்படுத்தப்படுகின்றது." என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் மீளாய்வு மற்றும் ஒழுக்கம் உதவி உப தலைவர் ரெஹான் இஸ்மைல் கருத்துத் தெரிவிக்கையில், "TISL இடமிருந்து இந்த கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டுள்ளதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். வெளிப்படையான அறிக்கையிடலில் தொடர்ச்சியாக நாம் மேற்கொண்டு வரும் முன்னேற்றங்களைப் பொறுத்தமட்டில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்துள்ளது என நாம் கருதுகின்றோம்." என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "TISL போன்ற புகழ்பெற்ற சுயாதீன அமைப்பினால் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வுகளினூடாகா, உறுதியான கொள்கைகள் வெளிப்படுத்தல்கள், கட்டமைப்புகள் மற்றும் செயன்முறைகள் போன்றன யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினுள் காணப்படுகின்றமை உறுதியாகியுள்ளது. மோசடி மற்றும் இலஞ்சம் தொடர்பில் கடுமையான விதிமுறைகளை நிறுவனம் கொண்டுள்ளது. நன்நடத்தை தொடர்பான ஒழுக்கக்கோவையினூடாக, பதவிநிலையில் வேறுபாடின்றி எமது சகல ஊழியர்கள் மத்தியிலும் நல்லொழுக்கமான செயற்பாடுகள் உறுதி செய்யப்படுகின்றது." என்றார்.


புகழ்பெற்ற பன்முகப்படுத்தப்பட்ட குழுமமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் துணை நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. உறுதியான ஒழுக்கப் பெறுமதிகளுக்காக புகழ்பெற்றுள்ள ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், TISL இன் 2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் கூட்டாண்மை அறிக்கையிடலுக்காக முதல் நிலையில் தரப்படுத்தப்பட்டிருந்தது.

புதுடெல்லி

2002 கலவரத்திற்குப் பிறகு மோடி அரசை கலைப்பதற்கு

# அகமது படேல் சதி செய்தார்

## குஜராத் பொலிஸ் அறிக்கை: காங்கிரஸ் கடும் கண்டனம்



'குஜராத் கலவரத்திற்குப் பிறகு மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) ஆட்சியை கலைப்பதற்கு செய்ய மறைந்த காங்கிரஸ் தலைவர் அகமது படேல் மிகப்பெரிய சதித்திட்டம் தீட்டினார்' என குஜராத் பொலிஸ் திடீரென அறிக்கை சமர்ப்பித்து உள்ளது.

குஜராத்தில் கடந்த 2002ம் ஆண்டு கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்துக்குப் பிறகு நடந்த கலவரம் தொடர்பான வழக்கில் இருந்து, அப்போதைய மாநில முதல்வரான பிரதமர் மோடி விடுவிக்கப்பட்டது செல்லும் என சமீபத்தில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதைத் தொடர்ந்து, இந்த வழக்கு தொடர்பாக தொடர்ந்து பேசிய வந்த சமூக ஆர்வலர் தீஸ்தா செதல்வாட்டை குஜராத் பொலிஸார் கைது செய்தனர். அவர் பிணைக் கோரிய வழக்கில், அகமதாபாத் நீதிமன்றத்தில் குஜராத் பொலிஸார் பிரமாண பத்திரத்தை வெள்ளியன்று தாக்கல் செய்தனர்.

அதில், 'குஜராத் கலவரத்திற்குப் பிறகு பா.ஜ.க அரசை கலைப்பதற்கு செய்ய மறைந்த காங்கிரஸ் மூத்த தலைவர் அகமது படேல் தீட்டிய பெரிய சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக தீஸ்தா செதல்வாட் செயல்பட்டார்' என கூறிப்பட்டுள்ளது. இதற்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: 2002ம் ஆண்டு குஜராத் கலவரத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட வகுப்புவாத படுகொலைக்கு பொறுப்பேற்பதில் இருந்து முழுமையாக தன்னை விடுவித்துக் கொள்ளும் பிரதமர் மோடியின் வழக்கமான உத்தியின் ஒரு பகுதிதான் இது. பிரதமரின் பழிவாங்கும் அரசியல், மறைந்த அரசியல் தலைவர்களைக் கூட விட்டு வைக்கவில்லை. இது மிகவும் மோசமான, ஜோடிக்கப்பட்ட குற்றச்சாட்டு. சிறப்பு புலனாய்வு குழு தனது அரசியல் எஜமானரின் தாளத்திற்கு ஏற்ப ஆடுகிறது. சொல்கிற இடத்தில் அவர்கள் உட்காரக் கூடியவர்கள் என்றார்.



புதுடெல்லி

ஜனாதிபதி, துணை ஜனாதிபதி தேர்தலுக்கு மத்தியில்

# இன்று சபை கூடுகிறது

ஜனாதிபதி, துணை ஜனாதிபதி தேர்தலுக்கு மத்தியில் பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது.

இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பதவி காலம் எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க எதிர்வரும் 18ம் திகதி வாக்கெடுப்பு நடக்கிறது. ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் ( பா.ஜ.க) தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக திரவுபதி முர்மு அறிவிக்கப்பட்டுள்ளார். எதிர்கட்சி வேட்பாளராக யஷ்வந்த் சின்கா நிறுத்தப்பட்டு உள்ளார்.

இதேபோல் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவின் பதவி காலமும் ஒகஸ்டு மாதம் 10 ஆம் திகதியுடன் முடிகிறது. இதற்கான தேர்தல் ஒகஸ்டு 6ம் திதி நடக்கிறது.

ஆளும் பா.ஜ.க மற்றும் எதிர்கட்சிகள் சார்பில் போட்டியிடும் வேட்பாளரை இன்னும் அறிவிக்கவில்லை. இந்நிலையில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வரும் 18ம் திகதி ஆரம்பமாகி ஒகஸ்ட் 12 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

சென்னை

# ஓ.பி.எஸ்க்கு கொரோனா



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஓ.பன்னீர்செல்வம் (ஓ.பி.எஸ்) தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் நலமாக உள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கடந்த சில தினங்களாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. நோய்யெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும், வேறு சில உடல்நலக்குறைவு உள்ளவர்களுக்கும் கொரோனா எளிதில் தாக்குகிறது. ஆகையால் மீண்டும் பாதிப்பு அதிகமாகி வருகிறது. பொதுநிகழ்ச்சிகளில் பங்கேற்கும் அரசியல் தலைவர்கள் பலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்திற்கு கடந்த சில நாட்களாக உடல் சோர்வாக காணப்பட்டது பரிசோதனை செய்து பார்த்ததில் கொரோனா உறுதியானது.

இந்நிலையில், கொரோனா தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெற்று வரும் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) ஒருங்கிணைப்பாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவருமான ஓ.பன்னீர்செல்வம் விரைந்து முழுமையாக நலம்பெற விழைகிறேன் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கேரளா

# மீசை மீது கொண்ட ஆசை



கேரளா மாநிலம் கண்ணூர் சோலையாடு பகுதியில் வசிப்பவர் ஷைஜா (வயது 34). இவர் சிறுவயதாக இருக்கும் போது இவருடைய முகத்தில் அதிக அளவு முடிகள் வளர்ந்து வந்தது. அப்போது இவரை சுற்றியுள்ளவர்கள் மிகவும் கேவலமாகவும், அவமானப்படுத்தியும் உள்ளார்கள். அப்போது இவர் மிகவும் மன வேதனையுடன் காணப்பட்டார்.

பின்பு இவருக்கு அதுவே பழக்கம் ஆகிவிட்டதால் அதை நம்மளுக்கு பிளஸ் பாயிண்டாக மாற்றி எடுக்க வேண்டும் என வைராக்கியம் வந்துள்ளது. அதை ஒட்டி பெண்களோ ஆண்களோ மீசை வளர்வதை குறித்து கேலியாக பேசுவதை அவர் எந்தவிதமான கவலையும் அடையவில்லை.

இந்த நிலையில் இவருக்கு பாலக்காடு சேர்ந்த லட்சுமணன் என்பவருடன் திருமணம் நடைபெற்றது. கணவரும் 'நீ மீசை வளர்ப்பது எனக்கு சந்தோசம் தான், நான் அதற்கு தடையாக இருக்க மாட்டேன்' எனகூறி உள்ளார். லட்சுமணன் பாலக்காட்டு பகுதியில் மின்னியலாளராக தொழில் செய்து வருகிறார்.

தற்போது இந்த பகுதியில் உள்ள பெண்கள் கூட ஷைஜா வளர்க்கும் மீசையை கண்டு புகழ்ந்து வருகிறார்கள். மீசை வளர்ப்பதற்கு ஆதரவும் அளித்து வருகிறார்கள். கேலி பேசிய ஆண்களும் இந்த முயற்சிக்கு பெரும் ஆதரவு அளித்து வருகிறார்கள்.

மேலும் ஷைஜா திருப்பூர் நகரில் உள்ள பனியன் கம்பெனிகளில் வேலை பார்த்து பணம் ஈட்டி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரை இப்போது இந்த பகுதியில் "மீசை ஷைஜா" என கூறி அழைத்து வருகிறார்கள்.

புனே

# பெண்ணின் தானத்தால் 5 பேருக்கு மறுவாழ்வு



புனேயை சேர்ந்த பெண்ணொருவர்ருவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு கமாண்ட் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த பெண்ணிற்கு மூளைச்சாவு ஏற்பட்டதாக டாக்டர்கள் அறிந்தனர்.

இதனால் குடும்பத்தினரிடம் பெண்ணின் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்தனர். இதையடுத்து டாக்டர்கள் கடந்த 15ஆம் திகதியன்று அறுவை சிகிச்சை நடத்தி பெண்ணின் உடலில் இருந்து சிறுநீரகங்கள், கண்கள் மற்றும் கல்லீரலை அகற்றினர். இதையடுத்து தானமாக பெற்ற சிறுநீரகங்களை அங்கு சிகிச்சை பெற்று வரும் 2 இராணுவ வீரர்களுக்கும், கண்கள் ஆயுதப்படை மருத்துவ கல்லூரியில் சிகிச்சை பெற்று வரும் 2 நோயாளிகளுக்கும் தானம் வழங்கப்பட்டது.

பின்னர் புனே ருபி ஹால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் மற்றொரு நோயாளிக்கு கல்லீரல் தானமாக கொடுக்கப்பட்டது. மூளைச்சாவு அடைந்த பெண்ணின் உடல் உறுப்பு தானத்தால் 5 நோயாளிகள் மறுவாழ்வு பெற்றனர்.

ரஷ்யா

# ரஷ்யாவுடன் மோதும் பல்கேரியா



ரஷ்யாவினால் வடிவமைக்கப்பட்ட ஹெலிகொப்டர்களின் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு 2 பல்கேரிய நிறுவனங்களுக்கும், ஒரு செக் குடியரசு நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டிருந்த அனுமதியை ரஷ்ய நிறுத்தி வைத்துள்ளது. அத்துடன் அந்நிறுவனங்களுக்கு ரஷ்ய இனி உதிரி பாகங்களை வழங்காது எனவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து பல்கேரிய இராணுவ அமைச்சர் ஜாகோவ் கூறியதாவது,

“இந்த நடவடிக்கையானது பல்கேரியாவை கடுமையாக பாதிக்காது. உக்ரேனின் இராணுவ உபகரணங்களை பழுதுபார்க்கும் பணியை தடுக்க முடியாது.

ரூபிளில் பணம் செலுத்த மறுத்ததால் பல்கேரியாவிற்கு ரஷ்ய எரிவாயு விநியோகத்தை நிறுத்தியதையும், எரிவாயு கொள்முதலில் என்ன நடந்ததோ, அதேபோன்று இப்போது ஹெலிகொப்டர் உரிமங்களிலும் நடந்துள்ளது” என்று அவர் கூறியுள்ளார்.

அமெரிக்கா

## வளர்ப்பு மகளுடன் திருமணம்? எலான் மஸ்கின் தந்தையால் பரபரப்பு




உலகப் பணக்காரர்கள் வரிசையில் முதல் இடத்தில் உள்ளவரும் , டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும், அதன் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலோன் மஸ்கின் (Elon musk) தந்தையான எரோல் மஸ்க் குறித்து தகவல் ஒன்று வெளியானது.

எரோல் மஸ்க்கிற்கு மொத்தம் இரண்டு மனைவிகள் உள்ளனர். இதில் முதல் மனைவியான மே மஸ்க்கிற்கு பிறந்தவர்கள் தான் எலான் மாஸ்க், கிம்பல் மஸ்க் மற்றும் டாஸ்கா மஸ்க்.

திருமணமான 9 ஆண்டுகளில் மனைவியை பிரிந்த எரோல், ஹைடி என்பவரை பின்னர் திருமணம் செய்து கொண்டார். இதன் மூலம் ஆஷா, அலெக்சாண்டரா என்ற இரு மகள்களுக்கும் எரோல் தந்தை ஆனார்.

ஏரோல் மஸ்க்கை மணப்பதற்கு முன்பாகவே, ஹைடிக்கு ஜனா என்ற மகளும் இருந்துள்ளதாக கூறப்படுகிறது. அப்படி ஒரு சூழலில் தான், எரோல் மஸ்க்கிற்கும், ஹைடியின் மகளான ஜனாவிற்கும் காதல் ஏற்பட்டு இருவரும் இணைந்து வாழ தொடங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றது.

சிலி



## வலையில் சிக்கிய இராட்சத மீன் : அச்சத்தில் மக்கள்

சிலி நாட்டில் உள்ள அரிகா பகுதியைச் சேர்ந்த சில மீனவர்களின் வலையில் சுமார் 16 அடி நீளம் கொண்ட ‘ஹெர்ரிங்ஸ் ராஜா‘ என அழைக்கப்படும் இராட்சத மீன் ஒன்று அண்மையில் சிக்கியுள்ளது. பொதுவாகவே ஆழ்கடல் பகுதியில் வசிக்கும் இவ் வகை மீன்கள் வெப்பமண்டல கடல்களில் அதிகளவில் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

மேலும் இவ் வகை மீன்கள் வலையில், சிக்குவதை அங்குள்ள மக்கள் விரும்புவதில்லை எனவும் ,இதனை கெட்ட சகுனமாக அவர்கள் கருதுவதாகவும், இவ்வகை மீன்கள் பிடிபட்டால் சுனாமி, நிலநடுக்கம் ஆகியவை ஏற்படும் என அவர்கள் நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இவற்றுக்கு அறிவியல் ரீதியாக எவ்வித சான்றுகளும் இல்லை என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா



## ஏலத்தில் ஹிட்லரின் கைக்கடிகாரம்?

ஹிட்லரின் கைக்கடிகாரம் எனக் கருதப்படும் கடிகாரமொன்று இலங்கை மதிப்பில் சுமார் 648கோடி ரூபாய்க்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளது. ஹிட்லருடைய பிறந்தநாள், 1933 ஆம் வருடத்தில் நாசிப்படை வென்ற நாள் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன கைக்கடிகார தயாரிப்பாளர்களும் இராணுவ வரலாற்று ஆசிரியர்களும் அக் கடிகாரத்தின் பின்னணியை ஆராய்ந்து அது ஹிட்லருடைய கைக்கடிகாரம் தான் என உறுதிப்படுத்தியுள்ளபோதும் Jaeger-LeCoultre என்ற கைக்கடிகார நிறுவனமானது அந்த கடிகாரம் ஹிட்லருடையது தான் என்று அங்கிகாரம் அளிக்கவில்லை.

பாகிஸ்தான்

## மனைவியைக் கொன்று வேகவைத்த கணவன்



நபரொருவர் தனது மனைவியைக் கொலைசெய்து அவரது சடலத்ததை நீரில் வேக வைத்த சம்பவம் பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள கராச்சி பகுதியை சேர்ந்தவர்கள் ஆஷிக், நர்கீஸ் தம்பதியினர். . இவர்களுக்கு 6 குழந்தைகள் உள்ளனர். கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஆஷிக், தனது மனைவியிடம் சண்டையிட்டு ஆத்திரத்தில் தலையணையைக் கொண்டு அவரைக் கொலை செய்துள்ளார்.

மேலும் அந்த சடலத்தை அவர் காவலராகப் பணியாற்றும் பாடசாலையின் சமயலறையில் உள்ள ஒரு பானையில் போட்டு வேகவைத்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் அதிர்ந்து போன பிள்ளைகள் செய்வதறியாது திகைத்த போது, ஒரு பிள்ளை மாத்திரம் இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதாகவும், இதையடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் வருவதற்குள், ஆஷிக் தனது குழந்தைகளில் 3 பேரை அழைத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பானைக்குள் இருந்த நர்கீஸின் உடலை கைப்பற்றியப் பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

## கட்டியணைக்க 30,000 ரூபாய் கட்டணம்



நபர் ஒருவர் கட்டியணைக்க இலங்கை மதிப்பில் சுமார் 30, 000 ரூபாய் கட்டணம் அறவிடும் சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவில் வசித்து வரும் ட்ரெவர் ஹட்டன் (Trevor Hooton) என்ற 30 வயதான இளைஞர் கட்டிப்பிடிப்பதை ஒரு தொழிலாக செய்து வருகின்றார்.

சுமார் ஒரு மணி நேரம் ஒருவரை கட்டியணைத்துக் கொள்வதற்கு, 75 பவுண்டுகள் அதாவது இலங்கை மதிப்பில் 31,533.90 ரூபாய் வரை கட்டணமாக அவர் வசூலித்து வருகிறார்.

இத்துடன் உறவு சிக்கல்களை தீர்க்கவும், பலமான உறவை வளர்த்துக் கொள்வது குறித்தும் பல அலோசனைகளை அவர் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த ட்ரெவர் “கட்டியணைப்பது என்பதைத் தாண்டி ஒருவரைத் தொடுதல் மூலம் அவருக்கு அன்பு, பாசம் மற்றும் அக்கறையும் கொடுக்க முடியும்.

இச் சேவையை எல்லோராலும் நிச்சயம் புரிந்து கொள்ள முடியாது. சிலர், நேரடியாகவே என்னிடம் நீங்கள் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதாகக் கூறி இருக்கிறார்கள். மனித உறவுகளை உருவாக்க வேண்டும் என்ற ஆரோக்கியத்தின் அடிப்படையில் தான் இதனை ஒரு தொழிலாகவே நான் ஒரு மாற்றிக் கொண்டேன்.

முதலாவது டெஸ்டில்

# முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராட்டம்




இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், காலியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த முதலாவது டெஸ்டின் முன்னிலைக்காக இரண்டு அணிகளும் போராடுகின்றன.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, தினேஷ் சந்திமாலின் 76, மகேஷ் தீக்‌ஷனவின் 38, ஒஷாத பெர்ணாண்டோவின் 35, குசல் மென்டிஸின் 21, தனஞ்சய டி சில்வாவின் 14, கசுன் ராஜிதவின் ஆட்டமிழக்காத 12, ரமேஷ் மென்டிஸின் 11 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஷகீன் ஷா அஃப்ரிடி 4, ஹஸன் அலி 2, யசீர் ஷா 2, மொஹமட் நவாஸ் 1, நசீம் ஷா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகின்ற பாகிஸ்தான், நேற்றைய இரண்டாம் நாள் தேநீர் இடைவேளை வரையில் 9 விக்கெட்டுகளை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் அணித்தலைவர் பாபர் அஸாம் 95 ஓட்டங்களுடனும், நசீம் ஷா ஐந்து ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். முன்னதாக, மொஹமட் றிஸ்வான் 19, யசீர் ஷா 18, ஹஸன் அலி 17, அப்துல்லாஹ் ஷஃபிக் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர். பந்துவீச்சில், பிரபாத் ஜெயசூரிய 5, ரமேஷ் மென்டிஸ் 2, மகேஷ் தீக்‌ஷன 1, கசுன் ராஜித 1 விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.



சிநேகபூர்வப் போட்டியில்

## எவெர்ற்றனை வென்ற ஆர்சனல்

ஐக்கிய அமெரிக்காவில் நேற்று அதிகாலை நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான எவெர்ற்றனுடனான சிநேகபூர்வப் போட்டியொன்றில் 2-0 என்ற கோல் கணக்கில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாக, கப்ரியல் ஜெஸூஸ், புகயோ சாஹா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, இத்தாலியில் நடைபெற்ற அந்நாட்டின் சீரி ஏ கழகமான இன்டர் மிலன், பிரெஞ்சு லீக் 1 கழகமான மொனாக்கோகிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்நிலையில், தென்கொரியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், ஸ்பானிய லா லி கா கழகமான செவிய்யாவிக்கிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.




## மே. தீவுகளை வெள்ளையடித்தது பங்களாதேஷ்

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளை பங்களாதேஷ் வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே வென்றிருந்த பங்களாதேஷ், கயானாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என மேற்கிந்தியத் தீவுகளை வெள்ளையடித்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

மே. தீவுகள்: 178/10 (48.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: நிக்கலஸ் பூரான் 73 (109), கேசி கார்ட்டி 33 (66) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஜியுல் இஸ்லாம் 5/28, மொஷாடெக் ஹொஸைன் 1/23, முஸ்தபிசூர் ரஹ்மான் 2/24, நசும் அஹ்மட் 2/39)

பங்களாதேஷ்: 179/6 (48.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 50 (65), தமிம் இக்பால் 34 (52), நுருல் ஹஸன் ஆ.இ 32, மகமதுல்லா 26 (61) ஓட்டங்கள். பந்துவீச்சு: குடகெஷ் மோட்டி 4/23, அல்ஸாரி ஜோசப் 1/25, நிக்கலஸ் பூரான் 1/38)

போட்டியின் நாயகன்: தஜியுல் இஸ்லாம்

தொடரின் நாயகன்: தமிம் இக்பால்

## ஓய்வு பெற்ற தமிம் இக்பால்



இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக பங்களாதேஷின் தமிம் இக்பால் அறிவித்துள்ளார்.

33 வயதான இக்பால், 78 போட்டிகளில் 1,758 ஓட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கல்முனை வலய மட்ட மெய்வல்லுநர் போட்டியில்

## சம்பியனான கல்முனை சாஹிரா

■ நூருல் ஹுதா உமர்

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்று முடிந்த பாடசாலைகளுக்கிடையிலான கல்முனை வலய மட்ட மெய்வல்லுநர் விளையாட்டு போட்டியில் ஆண்களுக்கான எட்டு அஞ்சலோட்ட போட்டிகளில் ஐந்து முதலிடங்களையும், 2 இரண்டாமிடங்களையும் பெற்று அஞ்சலோட்ட போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டதுடன், ஆண்களுக்கான போட்டிகளில் 131 புள்ளிகளைப் பெற்று கல்முனை சாஹிரா சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்போட்டியில் சாஹிராவிலிருந்து 28 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 7 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மாகாண மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 18 ஜுலை 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.